# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.150/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | திரு. காளைச்சாமி (சார்பு ஆய்வாளர் ) (P.w.4) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of February 2026

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை :-**

1. நான் விருதுநகர் மாவட்டம் கட்டனூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 08.10.2021ம் தேதியன்று மாலை 17.00 மணிக்கு திருச்சுழி காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது, திருச்சுழி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்க பெற்ற தகவலைப் பெற்று, அங்கு சென்று சிகிச்சையிலிருந்த குருணைக்குளத்தைச் சேர்ந்த குருவம்மாள் என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று, பின்பு நிலையம் வந்து 18.00 மணிக்கு, புகாரின் தன்மைகேற்ப மேற்படி நிலைய குற்ற எண்.211/2021 இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)- and 4 of TNPHW Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்தேன். மேற்படி புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நீதிமன்றத்திற்கும், நகல்களை சம்மந்தபட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. பின்னர் 09.10.2021ம் தேதி காலை 8.000 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துப்பாண்டி , கருப்பசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். (**அந்த பார்வை மகஜர் அசாஆ6 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). பின்னர் சம்பவ சாட்சிகள் குருவம்மாள், சாத்தன், காளிராஜ், , அழகுமலை, முத்துப்பாண்டி, கருப்பசாமி ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து கு.வி.மு.ச பிரிவு 161(3)–ன்படி வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. வழக்கின் எதிரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன்பிணையில் சென்றபடியால் அவர்களை கைது செய்யவில்லை. இவ்வழக்கில் 11.11.2021ம் தேதியன்று காயம்பட்ட குருவம்மாள் , சாத்தனனுக்கு சிகிச்சையளித்த திருச்சுழி அரசு மருத்துவர் திருமதி.கவிச்செல்வி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயசான்றுகள் பெற்றேன். 05.01.2022ம் தேதியன்று காயம்பட்ட சாத்தனனுக்கு மேல்சிகிச்சையளித்த அருப்புக்கோட்டை அரசு மருத்துவர் திருமதி.அனிதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயசான்று பெற்றேன். **(அருப்புக்கோட்டை அரசு மருத்துவனை மருத்துவர் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயசான்று அ.சா.ஆ.8 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து 05.01.2022ம் தேதியன்று எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)– and 4 of TNPHW Act கீழ் ன் கீழும் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

எ.த.கு.வி–

1. சம்பவமானது 07.10.2021ம் தேதியன்று மதியம் 12மணிக்கு நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 08.10.2021ம் தேதி காலை 11மணிக்கு நடந்ததாக எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அசா1 குருவம்மாள் வேலைக்கு செல்வதற்காக பாத்திரங்களை கழுவிக்கொண்டிருந்ததாக சொல்லி உள்ளாரா என்றால் பாத்திரம் கழுவி கொண்டிருந்ததாக சொல்லி உள்ளார். சம்பவ தேதியில் அசா1 க்கும் 1ம் எதிரிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாக புகார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். சத்தம் கேட்டுதான் சாத்தனன் வந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சாத்தனன் 1ம் எதிரியிடம் ஏன் இவ்வாறு செய்கிறாய் என்று கேட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி சாத்தனனின் மண்டையை கல்லை வைத்து உடைத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ சாட்சி காளிராஜ் சம்பவத்தை பார்த்திருக்கும்பட்சத்தில் அசா1 அவரது புகார் மனுவில் அதனை பற்றி சொல்லி இருப்பார் என்றால் சொல்லி உள்ளார். புகார் மனுவில் எங்கு சொல்லப்பட்டுள்ளது என்றால் "அப்போது அங்கு இருந்த மூக்கையா மகன் காளிராஜ் என்பவர் சத்தம் போட்டு விலக்கிவிடவும் மேற்படி இருவரும் மேற்படி இடத்தைவிட்டு போகும்போது என தெரிவிக்கப்பட்டுள்ளது". 1ம் எதிரி சாத்தனன் எந்த கல்லை வைத்து எறிந்தார் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அசா1 அவரது புகாரில் சாத்தனனுக்கு தலையில் ரத்தக்காயம் ஏற்பட்ட ரத்தமானது அவரது சட்டையில் படிந்திருந்தது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் சாத்தனின் நெற்றியில் கல்லை வைத்து எறிந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. அசா1 குருவம்மாளை எதிரிகள் கடித்ததாக புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட சாத்தனனை சம்பவ சமயத்தில் மூன்று பேர் தாக்கியதாக சொல்லவில்லை என்றால் ஒரு நபர் தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை அசா1டம் புகார் வாக்குமூலம் பெற்றதின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால்

முதல் தகவல் அறிக்கையில் காலம் 4ல் தகவல் எந்தவிதமாக பெறப்பட்டது என்றால் எழுத்து மூலமாக பெறப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவுடன் அது சம்பந்தப்பட்ட தகவல் உடனடியாக காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்படுமா என்றால் மருத்துவமனையில் காலதாமதாகவும் தகவல் வரும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளுக்கு மறுநாள் தான் நான் சென்று புகார் வாக்குமூலம் வாங்கினேன் என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் 8ம் தேதிதான் மருத்துவமனையில் இருந்து தகவல் வந்தது. மேற்படி 8ம் தேதி தகவல் வந்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து 20.10.2021ம் தேதி நீதிமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசா1 புகாரில் சம்பவ சமயத்தில் எதிரி வந்ததாக சொல்லப்படும் இரு சக்கர வாகனத்தின் பதிவு எண்ணோ அல்லது எந்த கம்பெனி பெயர் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி பயன்படுத்தியதாக சொல்லப்படும் கல்லையோ, சைக்கிள் செயினோ வழக்கில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் சேதாரமான பண்டங்களை புகைப்படம் எடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள நபர்களை சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

3. எனது விசாரணையில் எதிரியின் குடும்பத்திற்கும் அசா1ன் குடும்பத்திற்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை என்று தெரியவந்ததா என்றால் தெரியவந்தது. அந்த வகையில் புகார்தாரர் பொய்யாக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுக்க வாய்ப்பு உள்ளதா என்று விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன். எனது விசாரணையில் முன்விரோதம் காரணமாக புகார் கொடுக்கப்பட்டதா என்று தெரிந்து கொண்டேனா என்றால் முன்விரோதம் சிவில் பிரச்சனை ஆகும், இது பாத்திரத்தின் மீது இரு சக்கர வாகனத்தினை ஏற்றிய பிரச்சனை ஆகும். அசா1 புகாரில் 1ம் எதிரி அசா1ஐ அசிங்கமாக பேசியதால் அசா1ற்கு மற்றவர்கள் முன்னிலையில் தொந்தரவு ஏற்பட்டதாகவோ,

மனஉளைச்சல் ஏற்பட்டதாகவோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் மிரட்டியதால் அசா1ற்கு உயிர் பயம் ஏற்பட்டதாக புகாரில் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் பாதுகாப்பு கோரப்படவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் 1ம் எதிரி மருத்துவதுறையில் யோகா மருத்துவராக பணி செய்யும் விபரம் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் குருசாமி, முருகேஸ்வரி, வேல்பாண்டி ஆகியோர் குடியிருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 09.10.2021ம் தேதி 9மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து மாதிரி வரைபடம் தயார் செய்ததினால் யார் யார் அங்கு குடியிருப்பு உள்ளது என்று குறிப்பிடாமல் முரண்பட்டு மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசா1 குறுக்கு விசாரணையில் சம்பவ நடைபெற்ற அன்றே புகார் வாக்குமூலம் வாங்கியுள்ள சொல்லப்பட்டுள்ள நிலையில் நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் அசா1டம் புகார் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. அசா1 குடும்பத்திற்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் இடப் பிரச்சனை சம்பந்தமாக அசா1 எதிரிகளின் குடும்பத்தினர் மீது விரோதத்தை ஏற்படுத்திக் கொண்டு 1ம் எதிரி மருத்துவப்பணிக்கு தீங்கு விளைவிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான விசயங்களை கூறி எதிரிகளின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் அதற்கு நாங்கள் உதவி புரிந்துள்ளேனாம் என்றால் சரியல்ல.

4. அசா4 காளிராஜ் நீதிமன்ற விசாரணையில் சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்ற சாட்சியமளித்துள்ளநிலையில் தங்களது ஆலோசனையின்படி புகார் மனுவில் அவர் சம்பவ இடத்தில் விலக்கிவிட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாத்தனன் என்பவருக்கு 1ம் எதிரியால் எந்த விதமான காயங்களும் ஏற்படவில்லை என்பதால்தான் அவர் நீதிமன்றத்தில்

சாட்சியமளிப்பதை தவிர்த்துவிட்டார் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் சாட்சிகள் அசா1ன் உறவினர்கள் என்றால் சரியல்ல. குற்ற சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும் எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 3 அடி துாரத்தில் இருக்கும் ஒரு நபர் கல் வைத்து அடிக்கும்போது காயம் ஏற்படும் என்றாலும் எறியும்போது காயம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றாலும் காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அசா1 அவரது வீட்டு சுவற்றில் தேய்த்ததினால் ஏற்பட்ட சிராய்ப்பு காயத்தை வைத்துக் கொண்டு எதிரிகளின் மீது பொய் புகார் கொடுத்துள்ளார்கள் என்றும் அதன்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை -

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.